## தஞ்சை, செங்கிப்பட்டியில் ஜன.26 அன்று "வெல்லும் தமிழ்ப் பெண்கள்"

# தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் மாநாடு!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் பணிகள் தீவிரம்!





தஞ்சாவூர், ஜன. 23 -

தஞ்சாவூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலை செங்கிப்பட்டி அருகே திருமலை சமுத்திரம் பகுதியில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் "வெல்லும் தமிழ் பெண்கள்" டெல்டா மண்டல மகளிர் மாநாடு பணிகள் வெகு விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வருகின்ற 26.01.2026 திங்கள்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி அருகில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியா விலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ள "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" டெல்டா மண்டல மகளிர் மாநாட்டு பணிகள் மிக பிரமாண்ட மாக நடைபெற உள்ளது.

### 1.5 இலட்சம் மகளிர் பங்கேற்பு!

கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமை யில் நடைபெறும் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டில் சுமார் 1.5 இலட்சம் மகளிர் கலந்து கொள்ள உள்ளனர்.

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளா ளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலா ளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்க உள்ள மாநாட்டில் டெல்டா மண்டலத்தைச் சேர்ந்த 15 கழக மாவட்டங்களை உள்ளடக்கிய திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட வருவாய் மாவட்டங்களை சார்ந்த கழக மகளிர் அணியினர், கழக நிர்வாகிகள் சுமார் 1.5 இலட்சம் பேர் பங்கேற்க உள்ளனர்.

### 60 ஏக்கரில் மாநாட்டுத் திடல் 200 ஏக்கரில் வாகன நிறுத்தும் இடம்!

அதனை தொடர்ந்து 60 ஏக்கர் பரப்பில் மாநாட்டு திடலும், சுமார் 200 ஏக்கர் பரப்பில் வாகன நிறுத்த இடங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



மாநாட்டிற்கு வரும் மகளிர்க்கான அடிப்படை வசதிகளான பயோ கழிப்பறைகள் சுமார் 200க்கும் மேலும், 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 50 குடிநீர் தொட்டி, மேலும் 200 -க்கும் மேற்பட்ட குடிநீர் குழாய்கள், அவசரகால ஊர்தியான ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வருகை தரும் அனைத்து மகளிர்களுக்கும் உணவு மற்றும் குடிநீர் பாட்டில், பிஸ்கட் உள்ளிட்ட உணவு பொருட்கள் அடங்கிய பை அவரவரது இருக்கையில் வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டு மேடை மற்றும் அலங்காரப் பணிகளை தஞ்சை பந்தல் சிவா குழுவினர் இரவு பகலாக செய்து வருகின்றனர்.

மாநாட்டு விழா ஏற்பாட்டை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் / பொறுப்பாளர்களான அமைச் சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவ சங்கர், அன்பில் மகேஸ்பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன், எம்.எல்.ஏ., க.வைரமணி, சாக்கோட்டை க.அன்பழகன், எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன், எம். எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல், அமைச்சர் பெருமக்களான முனைவர் கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி. ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். கல்யாணசுந்தரம், அருண்நேரு, முரசொலி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இந்த மாநாட்டின் நிறைவில் தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ. நன்றியுரையாற்றுகிறார்.

---

## தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு கிராமத்தில்

# ரூ.2292.38 கோடி மதிப்பில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!

சென்னை, ஜன. 23 -

**தூத்துக்குடி மாவட்டம், முள்ளக் காடு கிராமத்தில் ரூ.2292.38 கோடி திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் திட டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத்துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழில் பூங்கா மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு முள் ளக்காடு கிராமத்தில் 2292.38 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன் றுக்கு 60 மில்லியன் லிட்டர் உற்பத் தித்திறன் கொண்ட கடல் நீரை நன்னீ ராக்கும் திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முழுவதும் பரவலான தொழில் வளர்ச்சியை உருவாக்கி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற் காக தமிழ்நாடு அரசு பல்வேறு முற் போக்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறது. அதன்படி, கடந்த நான்கரை ஆண்டுகளில் தென் மாவட்டங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, தூத்துக் குடியில் புதிய சிப்காட் தொழில் பூங் காக்கள் உருவாக்கப்பட்டு, மோட்டார் வாகன உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின் றன.

மேலும், செயற்கை நூற்பு இழை நிறுவனம், மின்னணு உற்பத்தி நிறு வனங்கள், அறைகலன் தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்பட உள்ளன. இவைமட்டுமின்றி, கப்பல் கட்டுமான தொழிற்சாலை, பசுமை சக்தி உற் பத்தி நிறுவனங்கள், விண்வெளி சாதன உற்பத்தி நிறுவனங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப் பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விரை வில் கட்டுமான பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

இந்த வளர்ச்சியினை மேலும் விரைவுபடுத்தும் விதமாக, தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் விரிவாக்கம், விமான நிலையம் விரி வாக்கம் மற்றும் மதுரை தூத்துக்குடி தொழில் வழித்தடங்கள் போன்றவை இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாக அமைந் துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, இப்பகுதி யின் சமச்சீர் வளர்ச்சி மேம்படுத்தும் வகையில் தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்காக தற்போது தாமிரப ரணி ஆற்றின் நீர் பயன்படுத்தப்பட்டு வருவதற்கு மாற்றாக, ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு கிராமத்தில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட் டர் (60 MLD) உற்பத்தித்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் ஆலை நிறுவி தண்ணீர் வழங்க வகை செய்யும் இத்திட்டம் Hybrid Annuity Model முறையில் 2292.38 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 40 சத வீதம் சிப்காட் பங்களிப்புடனும், Sri JWIL Infra Limited, IDE Technologies India Pvt. Ltd. Vishnusurya Projects & Infra Ltd. ஆகிய கூட்டமைப்பின் 60 சதவீ தம் பங்களிப்புடனும் மேற்கொள்ளப் படுகிறது.

இத்திட்டம், தூத்துக்குடி சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு மட்டுமல்லாது சுற் றுப்பகுதிகளில் உள்ள தொழில் நிறுவ னங்களுக்கும் குழாய் மூலம் தடை இல்லாத நீர் வழங்கும் சேவை யினை உறுதி செய்திடும். இதனால், வரும் காலங்களில் தாமிரபரணி ஆற்றின் நீரானது பொதுமக்களின் குடிநீர் தேவை மற்றும் விவசாயத் திற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி. கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், முனைவர் டி.ஆர். பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற் றும் வர்த்தகத் துறை அரசு செயலா ளர் வி.அருண்ராய், சிப்காட் நிறுவ னத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் கி.செந்தில்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# நெல்லை மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

*நெல்லை, ஜன. 23 -*

*நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க செயற் குழுக் கூட்டம் இன்று (23.01.2026 - வெள்ளிக் கிழமை) காலை 10 மணி அளவில் மேற்கு மாவட்ட அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கில் நடை பெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா.ஆவு டையப்பன் தெரிவித்துள் ளார்.*

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித் திருப்பதாவது:-



*முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (23-ஆம் தேதி - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கில் நடை பெறுகிறது.*

*இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட் டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், மாநில அணி நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று கருத்துக்களை வழங்க கேட்டுக்கொள்கி றேன்.*

**பொருள்:**

*1.ஜனவரி 25ல் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்.*

*2. 'வெல்லும் தமிழ் பெண்கள்' பூத் வாரியாக பரப்புரை.*

*3. பூத் கமிட்டி சரி பார்த் தல்.*

*4.தென்மண்டல இளை ஞர் அணி நிர்வாகிகள் கூட் டம் விருதுநகர்.*

*5. கழக வளர்ச்சி பணி கள்.*

*இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.*



சித்தரேவு ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் 300 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். த.வெ.க. மாவட்டச் செயற்குழு உறுப்பினர் நெல்லூர் பால்பாண்டி தலைமையில் தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்தினார்.